நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 03.03.2026 . மலர் 04 . இதழ் 61 . செவ்வாய்க்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 03.03.2026 . VOL 04 . ISSUE 61 . TUESDAY . 4 PAGES . Rs. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## கொமேனி படுகொலைக்கு பழிக்குப்பழியாக ஈரான் தாக்குதல்

# கொல்லப்பட்டாரா இஸ்ரேல் பிரதமர் ?



தெஹ்ரான், மார்ச்.03–

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவை குறிவைத்து கெய்பர் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அவர் என்ன ஆனார் என்பது குறித்து உறுதியான தகவல் இல்லை என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டி அந்நாட்டுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த சனிக்கிழமை தாக்குதலை தொடங்கின. இதில், அந்த நாட்டின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். ஈரானின் பாதுகாப்பு அமைச்சர், ராணுவத் தளபதி உட்பட 40-க்கும் மேற்பட்ட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலை அடுத்து, ஈரான் பதிலடியை கொடுக்கத் தொடங்கியது. ஈரானுக்கு ஆதரவாக, லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலைத் தாக்கத் தொடங்கியது. இதையடுத்து, ஈரான் மற்றும் லெபனானுக்கு எதிராக இஸ்ரேல் தனது தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. இது ஒருபுறம் இருக்க, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்து ஈரான் தாக்குதலை நடத்தி வருகிறது. இத்தகைய போக்குகள் காரணமாக போர் விரிவடைந்து வருகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை அறிவித்துள்ளது. அது வெளியிட்டுள்ள அறிக்கையில், "சயோனிச ஆட்சியின் கொடூர பிரதமரின் அலுவலகமும், அந்த ஆட்சியின் வான்படை தளபதியின் தலைமையகமும் குறிவைத்து தாக்கப்பட்டன. 'கெய்பர்' (Kheibar) ஏவுகணைகளைக் கொண்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. பெஞ்சமின் நேதன்யாகுவின் நிலை குறித்து இதுவரை தெளிவான தகவல் இல்லை' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இஸ்ரேலின் டெல் அவீவ், ஹைஃபா, கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களில் உள்ள இலக்குகளை குறிவைத்து ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் ஈரானின் புரட்சிகர காவல்படை தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலுக்கு, "பத்தாவது அலை" என பெயரிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதலை அடுத்து, ஜெருசலேம் வானில் வெடிச் சத்தங்கள் கேட்டதாக ஏஎஃப்பி செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா - இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் பாதுகாப்பு அமைச்சர் உயிரிழந்த நிலையில், அவருக்குப் பதிலாக புதிதாக இடைக்கால பாதுகாப்பு அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். இடைக்கால பாதுகாப்பு அமைச்சராக புரட்சிகர காவல் படை ஜெனரல் மஜித் எப்னெல்ரெசாவை அதிபர் மசூத் பெசஸ்கியான் நியமித்துள்ளதாக அதிபரின் தகவல் தொடர்பு துணை அதிகாரி மெஹ்தி தபதபாய் தெரிவித்துள்ளார்.

ஓமன் வளைகுடாவில் மார்ஷல் தீவுகள் கொடி ஏற்றப்பட்ட எண்ணெய் கப்பல் மீது வெடிகுண்டு நிரப்பப்பட்ட ட்ரோன் படகு மோதியதில் கப்பலில் இருந்த நபர் ஒருவர் உயிரிழந்தார். ஓமன் நியூஸ் ஏஜென்சி வெளியிட்டுள்ள தகவலில், முஸ்கட் கடற்கரைக்கு அருகில் இந்த தாக்குதல் நடைபெற்றது. தாக்கப்பட்ட கப்பல் "விரிஞ் கூஷிசீளிவி" என அடையாளம் காணப்பட்டது. உயிரிழந்தவர் இந்தியர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் புரட்சிகர படை தலைமையகம் அழிப்பு !!

ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்ததைத் தொடர்ந்து, வடக்கு பாகிஸ்தானில் உள்ள கில்ஜிட் மற்றும் ஸ்கார்டு நகரங்களில் நடந்த போராட்டங்களில் வன்முறை வெடித்தது. இதில் பலர் உயிரிழந்ததாகவும், பலர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, பாகிஸ்தான் அரசு அங்கு பாதுகாப்பை அதிகரித்துள்ளது. மேலும், மூன்று நாட்கள் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க தூதரகம் மற்றும் கராச்சி, லாகூரில் உள்ள துணை தூதரகங்களில் பாதுகாப்பு காரணங்களுக்காக விசா வழங்கல் ரத்து செய்யப்பட்டுள்ளன. பெஷாவரில் உள்ள அமெரிக்க துணை தூதரகம் உட்பட அமெரிக்கத் தூதரக வளாகங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**ஈரான் படையின் தலைமையகம் அழிப்பு**

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் (ஐஆர்ஜிசி) தலைமையகத்தை அழித்துவிட்டதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது. 'பாம்பின் தலை வெட்டப்பட்டது' என அமெரிக்கா இதை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து கூட்டாக ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளன. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் காமேனி, அவரது குடும்பத்தினர், ஈரானின் முக்கிய தலைவர்கள் உட்பட சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்காவின் நேச நாடுகளாக உள்ள பஹ்ரைன், ஜோர்டான், குவைத், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது.

"கடந்த 47 ஆண்டு காலத்தில் ஐஆர்ஜிசி சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கர்களை கொன்றுள்ளது. இந்நிலையில், நேற்று அமெரிக்கா மேற்கொண்ட பெரிய அளவிலான தாக்குதலில் பாம்பின் (ஐஆர்ஜிசி) தலை வெட்டப்பட்டது. இதன் மூலம் இனி ஐஆர்ஜிசி-க்கு தலைமையகம் என்பது இருக்காது. பூமியில் மிகவும் சக்தி வாய்ந்த ராணுவப்படையை அமெரிக்கா கொண்டுள்ளது. ஈரான் மீதான தாக்குதல் தொடரும்" என அமெரிக்க ராணுவம் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது. இது தொடர்பான வீடியோ ஒன்றையும் அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ளது.

ஈரான் ராணுவத்தின் சக்தி வாய்ந்த படைப்பிரிவாக இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (ஐஆர்ஜிசி) உள்ளது. கடந்த 1979-ல் இஸ்லாமிய புரட்சிக்கு பிறகு இஸ்லாமிய புரட்சிகர காவல் படையை காமேனி நிறுவினார். அவரது அறிவுறுத்தலுக்கு இணங்க ஐஆர்ஜிசி செயல்பட்டது.

## பிரதமர் மோடி பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் தாக்கு !

சென்னை, மார்ச்.03–

சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:தமிழ்நாட்டில் நமது திராவிட மாடல் அரசு செய்திருக்கும் சாதனைகளையும், நிறைவேற்றி இருக்கும் திட்டங்களையும் இந்திய அளவில் எல்லோரிடமும் கொண்டு சேர்ப்பதற்கான ஒரு மேடையை அமைத்து தந்துள்ள ஆங்கில இதழுக்கு நன்றி.தமிழ்நாட்டுக்கான என்னுடைய கனவு என்பது தனிப்பட்ட ஸ்டாலினின் கனவு மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கியதுதான்–ஸீதீஉஜீ;எனது கனவு. நூற்றாண்டுக்கு முன்பு திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதில் இருந்து தமிழர்களுக்காக தொடங்கிய கனவு, அதை நோக்கிய எங்கள் பயணத்தில் கடந்த 5 ஆண்டுகாலம் என்பது பெரும் பாய்ச்சலை கண்டுள்ளது.அனைத்து துறைகளையும் வளர்த்தெடுக்கும் ஆல்ரவுண்டர்தான் திராவிட மாடல். தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம். நாங்கள் இப்படி அனைத்து துறைகளிலும் ஆல்ரவுண்டர் ஆக அடித்து ஆடுவதால்தான், 'இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு' என்று நாங்கள் சொல்லவில்லை, மத்திய அரசே பாராட்டியுள்ளது. .நம்பர் ஒன் மாநிலம் மட்டுமில்லை, இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். பொருளாதார வளர்ச்சியில்–ஸீதீஉஜீ;மட்டுமல்ல, மனித வளம், தொழில் வளர்ச்சியிலும் இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு என்பதுதான் தமிழ்நாட்டின் தனித்தன்மை. அனைத்து பகுதிகளில் பரவலான, சமச்சீரான எல்லோருக்குமான வளர்ச்சியை எங்கள் திராவிட மாடல் ஆட்சியில் சாதித்து காட்டியுள்ளோம். தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் தங்களின் பகுதியில், வீடுகளில் எந்த அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை பார்க்கிறார்கள். திமுக ஆட்சி என்றால் வளர்ச்சி; வளர்ச்சி என்றால் அது திமுக ஆட்சி என தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியும். அதற்காகத்தான் இங்கு திராவிட மாடல் ஆட்சிக்கான ஆதரவு அலை வீசுகிறது.பாஜக ஆளும் மாநிலங்களில் டபுள் எஞ்சின் ஆட்சி என்பது டப்பா எஞ்சின் ஆட்சி.. அங்கே வளர்ச்சியே இல்லை. தமிழகத்தை போன்ற வளர்ச்சியை அங்கே காட்ட முடியுமா?. மதுரைக்கு வந்த பிரதமர் மோடி சொல்ல சாதனைகள் இல்லாததால் பொய்யை அவிழ்த்துவிட்டிருக்கிறார். மதுரவாயல் துறைமுகம் பறக்கும் சாலை–ஸீதீஉஜீ;திட்டத்தை தாமதப்படுத்தியது அதிமுகதான்.. திமுக ஆட்சிக்கு வந்த பின்பே திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டது. எடப்பாடி பழனிசாமி அதிமுக ஆட்சி என்கிறார்; பிரதமர் மோடி என்.டி.ஏ. ஆட்சி என்கிறார். யார் யாருக்கு தலைமை என்று தெரியாமலேயே ஒரு கூட்டணி உள்ளது.திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகள் எல்லாம், மத்திய அரசின் உதவி இல்லாமலே சாதித்துக் காட்டியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் நெருக்கடிகளை மீறி சாதித்துக் காட்டியிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## சொக்கநாதிருப்பு கிராமத்தில் அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீசக்தி வீர காளியம்மன் திருக்கோயிலில் விளக்கு பூஜை : ஏராளமான பெண்கள் பங்கேற்று வழிபாடு !



திருப்புவனம், மார்ச். 03–

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சொக்கநாதிருப்பு கிராமத்தில் அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ சக்தி வீர காளியம்மன் திருக்கோயிலில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு விளக்கு பூஜை நடைபெறுகிறது.

இக்கோயிலில் இந்த கிராமத்தை சேர்ந்த ஐந்து வகை பங்காளிகள் மற்றும் பெண்ணடி பிள்ளைகள் சார்பில் விளக்கு பூஜை நடத்துவது வழக்கம் அந்த வகையில் இந்த மாதம் பௌர்ணமி நாள் விளக்கு பூஜை இரண்டாம் கரை பங்காளிகள் சார்பில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த பூஜையில் ஏராளமான பெண்கள் பங்கேற்று உலக நன்மை வேண்டி ஊர் மக்கள் ஒற்றுமை மற்றும் விவசாயம் செழிக்க வேண்டும் என அம்மனிடம் பிரார்த்தனை செய்து விளக்கு ஏற்றி சிறப்பு வழிபாடு செய்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை முனியாண்டி தேவர் வகையறாவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# அமெரிக்க அசுரன் !

## கொத்து, கொத்தாக உயிர்களை பறிக்கும் டொமஹாக் ஏவுகணை




டெஹ்ரான், மார்ச்.03–

'ரோரிங் லயன்' என்ற பெயரில் இஸ்ரேலும், 'எபிக் ஃப்யூரி' என்ற பெயரில் அமெரிக்காவும் ஒன்றிணைந்து நடத்திய தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் காமேனி, ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சில் முன்னாள் செயலாளர் அலி சம்கானி, ஈரான் ராணுவ கமாண்டர் முகமது பக்போர் ஆகியோர் இறந்தனர்.

இந்த தாக்குதலில் அயத்துல்லா அலி காமேனியின் மகள், மருமகன், பேத்தி ஆகியோரும் இறந்தனர். இதேபோல் ஈரானின் இஸ்ஃபாகன் மற்றும் சிராஸ் ஆகிய முக்கிய பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டன. இந்த தாக்குதலில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் பயன்படுத்திய ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு–

**டொமஹாக் ஏவுகணை**

இது அமெரிக்க கடற்படை பயன்படுத்தும் தொலை தூர ஏவுகணை. போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்களில் இருந்து இவற்றை ஏவ முடியும். 30 முதல் 35 என்ற குறைந்த உயரத்தில் இது பறக்கும்போது, எதிரி நாட்டின் ரேடார்களில் சிக்காது.

5.6 மீட்டர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை 1,600 கிலோ எடை உடையது. மணிக்கு 880 கி.மீ வேகத்தில் சென்று 1,600 கி.மீ தூரத்துக்கும் அப்பால் உள்ள இலக்கை தாக்கும் திறன் படைத்தவை.

**எப்–35ஐ 'அடிர்'**

இது இஸ்ரேல் தொழில்நுட்பங்கள் சிலவற்றுடன் மேம்படுத்தப்பட்ட போர் விமானம். ரேடாரில்சிக்காத இந்த விமானங்கள் மூலம் இஸ்ரேல் பைலட்டுகள் ஈரானுக்குள் நேற்று முன்தினம் ஊடுருவி துல்லிய தாக்குதலை நடத்தியுள்ளனர். இவை தவிர எப்–15து ராம், எப்–15இ ரக போர் விமானங்களையும் இஸ்ரேல் பயன்படுத்தி ஈரானில் குண்டுகளை வீசியுள்ளது.

**டெலிலா, ரேம்பேஜ் ஏவுகணை**

இது இஸ்ரேல் ராணுவம் பயன்படுத்தும் தொலை தூர ஏவுகணைகள். இவையும் துல்லிய தாக்குதல் நடத்தும் திறனுடையவை.

**ஸ்பைஸ் குண்டு**

ஈரான் மீதான தாக்குதலில் ஸ்பைஸ், ஜேடிஏஎம் நிறுவன குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இந்த குண்டுகள் போர் விமானங்களில் எடுத்துச் செல்லப்பட்டு ஈரானில் வீசப்பட்டன.

**ஜிபியு–28**

ஜிபியு–28 என்ற லேசர் குண்டு 2,268 கிலோ எடையுள்ளது. இது பூமிக்கு அடியில் உள்ள சுரங்கங்களை தகர்க்கும் திறன் வாய்ந்தது.

**ஹெராஜ் மற்றும் எய்டன்**

இது இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் நிறுவனம் உருவாக்கியுள்ள தொலைதூர ட்ரோன்கள். இவையும் ஈரானில் துல்லிய தாக்குதல் நடத்தின.

**ஈரான் பதிலடி**

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளின் தாக்கு தலையடுத்து இஸ்ரேல், பஹ்ரைன், குவைத், கத்தார் ஆகிய இடங்களில் உள்ள அமெரிக்க ராணுவம் முகாம்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் ஹாகப், ராட், யா–அலி, கியாம், சோமர், இமாத், கொராம்சார், செஜ்ஜில் ஆகிய ஏவுகணைகளை ஈரான் பயன்படுத்தியது. இவைகள் தொலைதூர, குறுகிய தூர இலக்குகளை தாக்கும் ஏவுகணைகள் ஆகும். ஏவுகணைகள் தவிர ட்ரோன்கள் மூலமும் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

## முதல்வரின் பள்ளி பருவ குழு புகைப்படத்தை பிறந்தநாள் பரிசாக வழங்கி கௌரவிப்பு




சுசீந்திரம், மார்ச்.3–

கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் இந்து அறநிலையத்துறை அறங்காவல் குழு தலைவரும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பிரபா ராமகிருஷ்ணன் மாண்புமிகு முதல்வர் மு க ஸ்டாலின் பள்ளி பருவ குழு புகைப்படத்தை பிறந்தநாள் பரிசாக அளித்தார்.

உடன் முதல்வரின் பள்ளி பருவ ஆசிரியர் திரு எபிஷன் டேனியல் நாகர்கோவில் மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி துணைத் தலைவர் மல்டன் துணை அமைப்பாளர் மணிகண்டன் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற +2 வகுப்பு பொதுத்தேர்வு மையம் ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டார்.

# அய்யா வைகுண்டசாமி அவதார தின விழா ஊர்வலம் திருச்செந்தூர், திருவனந்தபுரத்தில் இருந்து இன்று தொடக்கம்

## குமரி மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை!!

நாகர்கோவில், மார்ச்.3-

ஆண்டு தோறும் மாசி 20ஆம் தேதி அய்யா வைகுண்டர் அவதார தின விழா கொண்டாடப்படுகிறது. அதன்படி நாளை 4 ம் தேதி அவதார தின விழாவாகும்.

இதையொட்டி திருச்செந்தூர், செந்தூர் அவதார பதியிலிருந்து குமரி மாவட்டம் சாமிதோப்பில் உள்ள அய்யா வைகுண்ட சாமி தலைமை பதி நோக்கி வாகன ஊர்வலம் இன்று 3ம் தேதி காலை தொடங்குகிறது. இந்த வாகன பவனி திருச்செந்தூர், கூடங்குளம் ஆரல்வாய்மொழி வழியாக இரவு நாகர்கோவில் நாகராஜா கோவில் மைதானம் வந்தடைகிறது.

இதே போல் கேரள மாநிலம் திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் வடக்கு வாசலில் இருந்து வாகன ஊர்வலம் இன்று 3-ம் தேதி காலை தொடங்குகிறது. இந்த ஊர்வலம் திருவனந்தபுரம், பாறசாலை, மார்த்தாண்டம், வழியாக நாகர்கோவில் நாகராஜா திடலில் வந்தடைகிறது. பின்னர் நாகராஜா கோவில் மண்டபத்தில் மாசி மாநாடு நடக்கிறது.

நாளை 4 ம் தேதி அதிகாலையில் நாகராஜா கோவிலில் இருந்து ஐயா அவதார தின ஊர்வலம் சாமிதோப்பு புறப்படுகிறது. சாமிதோப்பு தலைமை பதிக்கு ஊர்வலம் சென்றடைந்தபின் பூஜைகள் நடைபெறுகிறது. இந்த ஊர்வலத்தில் செண்டை மேளம் முழங்க, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அகில திரட்டு ஏந்திய ஐயாவின் வாகனம் முன் செல்கிறது. அது தொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அணிவகுத்து செல்கின்றனர். முன்னதாக இன்று 3ம் தேதி மாலை ஆதலவிளை வைகுண்ட மாமலையில் சாமி தோப்பு தலைமை பதிவிலிருந்து தீபம் கொண்டு சென்று தீபம் ஏற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஐயா அவதார தின விழாவை ஒட்டி நாளை 4 ம் தேதி குமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை ஆகும்.

# தருமபுரி மாவட்ட தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் செயல் வீரர்கள் கூட்டம்



தருமபுரி, மார்ச். 03-

தருமபுரி மாவட்ட தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் மாவட்டத்தில் உள்ள தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர் ,பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்கான செயல் வீரர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர்கள் தாபா சிவா, விஜயகாந்த் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய வேண்டும். கழகத் தலைவரை முதலமைச்சர் பதவியில் அமர வைக்க வேண்டும். அனைத்து அணிகளின் நிர்வாகிகளும், உறுப்பினர்களும் வீடு வீடாகச் சென்று பொது மக்களை சந்தித்து கழகத்தின் செயல்பாடுகளை குறித்து எடுத்துரைக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் தருமபுரி நகர செயலாளர் சிட்டி சுரேஷ், இளைஞர் அணி விமல்ராஜ், வீரமணி மற்றும் மாநில, மாவட்ட, நகர, பேரூர், ஒன்றிய கிளை கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டு நடப்புகளை உடனுக்குடன் அறிய தின தமிழ் நாளிதழை தினந்தோறும் படியுங்கள்!

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சாலையோர வியாபாரிகள் போராட்டம் விரைவில் தீர்வு காணப்படும் என ஆட்சியர் உறுதி



இராமநாதபுரம், மார்ச்.3-

இராமநாதபுரம் மாவட்டம் சாலையோர வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் ராமேஸ்வரம் 4 ரத வீதிகளில் பிப்ரவரி 5ஆம் தேதி எந்தவித முன் அறிவிப்பும் இன்றி சாலையோர வியாபாரிகளை அப்புறப்படுத்தி காவல்துறையையும் துணைக்கு வைத்துக் கொண்டு வியாபாரிகள் மீது தாக்குதல் நடத்திய காவல்துறை மற்றும் வருவாய் துறை நிர்வாகத்தை கண்டித்தும் சாலையோர வியாபாரிகளுக்கு 25 நாட்கள் ஆகியும் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு எந்தவித உத்திரவாதம் இல்லாத நிலை உருவாக்கிய ராமேஸ்வரம் நகராட்சியை கண்டித்தும் ராமேஸ்வரம் பகுதிகளில் அப்புறப்படுத்தப்பட்ட பகுதியில் வியாபாரம் நடத்த அனுமதி வேண்டி சாலையோர வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் முத்து விஜயன் தலைமையில்தலைவர் வி.ஆலடி ஈஸ்வரன் மாவட்ட பொருளாளர் என்.பி.செந்தில். மற்றும் சி ஐ டி யு மாவட்ட தலைவர் எம். சிவாஜி சி ஐ டி யு மாவட்ட செயலாளர் எஸ்.ஏ.சந்தானம் சி ஐ டி யு மாவட்ட நிர்வாகிகள் சுடலை காசி சாலையோர வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் சின்னத்துரை முருகன் மாரியப்பன் மாதர் சங்க மாவட்ட செயலாளர் நிர்மலா மற்றும் மாதர் சங்க நிர்வாகிகள் மற்றும் 200 பெண்கள் உள்பட 250 பேர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு கொடுக்க வந்தபோது காவல்துறை வழி விட மறித்து அனுமதி மறுத்தனர் மனு வாங்குவது வரை செல்ல மாட்டோம் என உண்ணாவிரத போராட்டம் தொடங்குவது என முடிவெடுக்கப்பட்டது

அதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் வந்து மனு வாங்க வேண்டும் எனகோரிக்கை வைக்கப்பட்டது உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வந்து மனுவை பெற்றுக் கொண்டு நிர்வாகிகளை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சென்றார் மாவட்ட ஆட்சியரை சந்தித்ததில் இன்னும் மூன்று தினங்களுக்குள் கலந்து பேசி சாலையோரம் கடைகள் வைக்க ஆவணசெய்வோம் என உறுதி அளித்தார் அதைத்தொடர்ந்து போராட்டம் தற்காலியமாக ஒத்தி வைக்கப்பட்டது



வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில்,கோவை மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதியில் திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் போட்டியிட விருப்பமனு வழங்கியபோது எடுத்தபடம்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

# பிளஸ்டு தேர்வு மையங்களில் கிருஷ்ணகிரி கலெக்டர் ஆய்வு



கிருஷ்ணகிரி, மார்ச்.03–

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், 12 ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான அரசு பொதுத்தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 12– வகுப்பு பொது தேர்வு 02.03.2026 முதல் 26.03.2026 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் கல்வி மாவட்டங்களில் உள்ள 108 அரசுப்பள்ளிகள், 6 அரசு உதவி பெறும் பள்ளிகள், 79 மெட்ரிக் பள்ளிகள் என மொத்தம் 193 பள்ளிகளில் பயிலும் 10,846 மாணவர்கள், 11,802 மாணவிகள், 226 மாற்றுத்திறன் மாணவர்கள் என மொத்தம் 22,874 மாணவ, மாணவிகள் இத்தேர்வை எழுத உள்ளனர். இத்தேர்விற்காக கிருஷ்ணகிரி கல்வி மாவட்டத்தில் 51 மையங்கள், ஓசூர் கல்வி மாவட்டத்தில் 37 மையங்கள் என மொத்தம் 88 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வினாத்தாள்களைப் பாதுகாப்பாக வைக்க கிருஷ்ணகிரி, ஓசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் மத்தூர் ஆகிய இடங்களில் வினாத்தாள் சேமிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தேர்வுப் பணிகளுக்காக 88 முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 95 துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அறை கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர்கள் தேர்வுகளைக் கண்காணிக்க பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

மாணவ மாணவியர்கள் எவ்வித சிரமமின்றி தேர்வு மையங்களுக்கு செல்வதற்கு பேருந்து வசதிகளும், தேர்வு மையங்களில் குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதிகள், காவல் துறை மூலதட பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதும்போது தேர்வு குறித்த அச்சம் மற்றும் பதற்றத்தை தவிர்த்து தைரியமுடன் சிறப்பான முறையில் தேர்வுகள் எழுதி வெற்றி பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .மதன்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கல்வி .சர்தார் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

# கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்களையும் மீனவர்களின் படகுகளையும் மீட்டு தர பிரதமரிடம் முன்னாள் அமைச்சர் டாக்டர் மணிகண்டன் கோரிக்கை



ராமநாதபுரம், மார்ச். 3-

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் தீவுப் பகுதியில் உள்ள 31 மீனவர்களையும் மற்றும் படகுகளையும் இலங்கை கடற்படையினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் மீனவர்களின் படகுகளையும் உடனடியாக மீட்டு தரும்படி பாரத பிரதமர் மோடியிடம் அதிமுக முன்னாள் அமைச்சர் டாக்டர் மணிகண்டன் கோரிக்கை மனு வழங்கினார்.

இதே கோரிக்கை மனுவை மத்திய அமைச்சர் எல்.முருகன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆகியோரிடமும் முன்னாள் அமைச்சர் டாக்டர் மணிகண்டன் வழங்கினார்.

# பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மக்கள் பாதுகாப்பு இயக்கத்தினர் திருப்பூர் கலெக்டரிடம் கோரிக்கை மனு



திருப்பூர், மார்ச். 3–

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மக்கள் பாதுகாப்பு இயக்கத்தினர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு ஒன்றை வழங்கினார்கள் அதில் கூறியிருப்பது என்னவென்றால் நெல்லை மாவட்டம் திம்மராஜபுரத்தில் தேசிய தலைவர் சுதந்திர போராட்ட தியாகி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருவுருவப்படத்தின் மீது பெட்ரோல் குண்டு வீசிய சமூக விரோதிகளை கைது செய்ய வலியுறுத்தியும் அதே இடத்தில் ஐயாவிற்கு வெண்கல முழு உருவ சிலை தமிழக அரசு அமைத்து தர வேண்டுமென கோரிக்கை மனு வழங்கினார்கள்

இந்த பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவம் என்பது ஒட்டுமொத்த முக்குலத்தோர் சமூக மக்களின் மனதையும் பொது மக்களின் மனதையும் கடுமையாக புண்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தனர் இயக்கத்தின் நிறுவன தலைவர் இசக்கி ராஜா தேவர் வழிகாட்டுதலின்படி நிர்வாகிகள் மாவட்ட தலைவர் பால்பாண்டி.தென் மண்டல இளைஞர் அணி தலைவர் மணிகண்டன்.துணைத் தலைவர் காந்தி.மாவட்ட பொருளாளர் மாரிதுரை. மாவட்ட துணை செயலாளர் ஹரி கிருஷ்ணன்.வர்த்தக அணி செயலாளர் சுப்பிரமணியன். உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கை மனுவினை வழங்கினார்கள்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

# பணத்தை மீட்டுதர கோரி கலெக்டர் கண்ணெதிரிலேயே மாற்றுத்திறனாளி பெண் தீக்குளிக்க முயற்சி



வேலூர், மார்ச்.03-

வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர்வு கூட்டம் கலெக்டர் சுப்புலெட்சுமி தலைமையில் இன்று நடந்தது. பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொது மக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

காட்பாடி அடுத்த ஜாப்ரா பேட்டை சேர்ந்தவர் கவிதா வயது 36 இவர் கலெக்டர் இடம் மனு அளிக்க வந்திருந்தார். அப்போது கலெக்டர் கண் எதிரிலேயே உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றார். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் கவிதா உடலில் தண்ணீரை ஊற்றி ஆசுவாசப்படுத்தினர். பின்னர் கவிதா கலெக்டரிடம் கூறுகையில் நான் ஜாப்ரா பேட்டையில் உள்ள அஞ்சலகத்தில் ரூ 4 லட்சம் வரை கட்டி இருந்தேன். அஞ்சலகத்தில் வேலை செய்து கொண்டு இருந்த ஊழியர் ஒருவர் பணத்தை அரசுக்கு செலுத்தாமல் மோசடி செய்து விட்டார். என்னைப் போல் இருவதுக்கும் மேற்பட்டோர் இடம் பண மோசடி செய்துள்ளார். இது சம்பந்தமாக போலீசில் புகார் செய்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கலெக்டர் அலுவலகத்திலும் பலமுறை மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கை எடுக்காததால் தீக்குளிக்க முடிந்ததாக தெரிவித்தார். தனது பணத்தை மீட்டு தர வேண்டும் என கலெக்டரிடம் தெரிவித்தார் கலெக்டர் சுப்புலட்சுமி உடனடியாக கவிதாவை மீட்டு அடுக்கம்பாறை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து உரிய சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

# தருமபுரி நகர பாஜக சார்பில் திமுக அரசை கண்டித்து தெருமுனை பிரச்சார கூட்டம்



தருமபுரி, மார்ச். 03-

தருமபுரி நகர பாரதிய ஜனதா கட்சி சார்பில் நாளை நமதே! தமிழ்நாடும் நமதே! என்ற தலைப்பில் திமுக அரசின் நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து தருமபுரி நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் சக்தி கேந்திர தெருமுனை பிரச்சார கூட்டம்கள் நடைபெற்றது. இறுதியாக தருமபுரி ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் அருகில் நகரத் தலைவர் சாய் ஆறுமுகம் தலைமையில் சக்தி கேந்திரா தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் அதிமுக நகர செயலாளர் பூக்கடை ரவி ,மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் அசோகன், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, அமமுக நகரச் செயலாளர் பார்த்திபன் ,பாமக மாவட்ட செயலாளர் எஸ். பி. வெங்கடேஸ்வரன் எம் எல் ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்தக் கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் அனைத்து கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட ஒன்றியச் செயலாளர் விருப்பமனு தாக்கல்



சென்னை, மார்ச்.03-

தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஓட்டப்பிடாரம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட, ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் அ. இளையராஜா அண்ணா அறிவாலயத்தில் விருப்பமனு தாக்கல் செய்தார்.

தமிழக முதல்வர் மற்றும் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி, தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளிலும் போட்டியிட விரும்புவோர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் விருப்பமனு அளிக்கலாம் என்று திமுக பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அறிவித்திருந்தார்.இதனைத் தொடர்ந்து, விருப்பமனுத் தாக்கல் செய்யும் பணிகள் அண்ணா அறிவாலயத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுகவிற்குட்பட்ட ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியச் செயலாளரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான அ. இளையராஜா விருப்பமனு அளித்தார்.

முன்னதாக, அவர் திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மற்றும் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்து விருப்பமனு விண்ணப்பப் படிவத்தைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.கட்சியின் மூத்த நிர்வாகிகளின் வாழ்த்துகளைப் பெற்ற பின்னர், அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட நிர்வாகிகளிடம் தனது விருப்பமனுவை அ. இளையராஜா சமர்ப்பித்தார். இந்த நிகழ்வின் போது, ஓட்டப்பிடாரம் தொகுதியைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் உடனிருந்தனர்.




முதுகுளத்தூரில் தமிழர் அடித்தளம் அறக்கட்டளை சார்பாக தொல்காப்பியர் விருதுகள் 2021 சட்டமன்றத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்ட முதுகுளத்தூர் பி.முருகன் என்பவருக்கு வழங்கினர்.

# முதுகுளத்தூரில் தவெக செயல்வீரர் கூட்டம்



முதுகுளத்தூர், மார்ச்.03-
முதுகுளத்தூரில் தமிழக வெற்றி கழகம் சார்பில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக கிளை பூத் நிர்வாகிகள் செயல்வீரர் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதுகுளத்தூர் மத்திய ஒன்றிய செயலாளர் விஜித் ராஜா வரவேற்புரை வழங்கினார். ராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எம் ஆர் மதன் தலைமையற்றினார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள் கிளைச் செயலாளர்கள் பூத் கமிட்டி நிர்வாகிகள் என 600 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் யாசர் அரபாத் ஏற்பாடு செய்திருந்தார்.

# முதலமைச்சர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்த கிராம மக்கள்




தாராபுரம், மார்ச். 03-
திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை அடுத்த குண்டடம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட தாளக்கரை பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய பயணியர் நிழல் குடை அமைக்கும் பணியை, மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். அதன் பின்னர் சங்கரண்டாம் பாளையம் ஊராட்சி, புதுப்பாளையம் கிராமத்தில், பகுதி நேர நியாய விலைக் கடையை திறந்து வைத்து, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட புதுப்பாளையம் கிராம பொதுமக்கள் கூறுகையில், இது நாள் வரை சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வந்தோம். இதனால், முதியவர்கள் மற்றும் பெண்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளானார்கள். எனவே, புதுப்பாளையத்தில் ரேஷன் கடை அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தோம். இதனை ஏற்று, எங்கள் ஊரில், பகுதி நேர ரேஷன் கடையை திறந்து வைக்க ஆணையிட்ட தமிழக முதல்வருக்கு எங்கள் ஊர் பொதுமக்கள் சார்பில், நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், குண்டடம் மேற்கு ஒன்றிய செயலாளர் சந்திரசேகர், பொது குழு உறுப்பினர் கருணாகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# நடமாடும் உழவர் சந்தை வாகனங்களை ஆட்சியர் இளம்பகவத் தொடங்கி வைத்தார்




தூத்துக்குடி, மார்ச்.03-
தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு முன்னெடுப்பாக, விவசாயிகளின் விளைபொருட்களை நேரடியாக நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கும் வகையில் 8 நடமாடும் உழவர் சந்தை மின்சார வாகனங்களை மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களது விளைபொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக விற்பனை செய்ய உதவும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. என்.டி.பி.எல் (ழிஜிறிலி) நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு நிதி (சிஷிஸி) பங்களிப்புடன், சுமார் ரூ. 36.28 லட்சம் மதிப்பீட்டில் 8 மூன்று சக்கர மின்சார ஆட்டோக்கள் இதற்காக வழங்கப்பட்டுள்ளன.தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி உழவர் சந்தைக்கு ஆறு ஆட்டோக்களும், கோவில்பட்டி உழவர் சந்தைக்கு இரண்டு ஆட்டோக்களும் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் வட்டாரத்தில், 62 வருவாய் கிராமங்கள், கயத்தார் வட்டாரத்தில், 33 வருவாய் கிராமங்கள், ஆழ்வார்திருநகரி வட்டாரத்தில், 57 வருவாய் கிராமங்கள், கோவில்பட்டி வட்டாரத்தில் 32 வருவாய் கிராமங்கள் பயனடையும். இந்த 8 வாகனங்களில், தூத்துக்குடி உழவர் சந்தைக்கு 6 ஆட்டோக்களும், கோவில்பட்டி உழவர் சந்தைக்கு 2 ஆட்டோக்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் தெரிவித்ததாவது: இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்களது தோட்டத்து விளைபொருட்களை நேரடியாக மக்களின் இல்லங்களுக்கே கொண்டு சென்று விற்பனை செய்ய முடியும். இதனால் நுகர்வோருக்குப் பசுமையான காய்கறிகள் குறைந்த விலையில் கிடைப்பதுடன், ஒரு விவசாயி நாளொன்றுக்குக் கூடுதலாக ரூ. 1000 வரை வருமானம் ஈட்ட வாய்ப்பு உருவாகியுள்ளது. விவசாயிகளைத் தொழில்முனைவோராக மாற்றி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்நிகழ்வில் வேளாண்மை இணை இயக்குநர் க. கிருஷ்ணகுமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செள. மனோரஞ்சிதம், என்.டி.பி.எல் பொது மேலாளர் டி.ஏ. அரவிந்த்ராஜா, வேளாண் வணிகத் துணை இயக்குநர் சுதாமதி, விற்பனைக்குழுச் செயலாளர் ப. எழில் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடங்கியுள்ளதையொட்டி, தேர்வு மையங்களில் ஒன்றான கரூர் புனித தெரசா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.






ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார் உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சங்கரநாராயணன் உள்ளார்.

# பிரதமர் மோடியை அவமதித்த விவகாரம் நாகர்கோவில் மாவட்ட காங்கிரஸ் தலைவர் நள்ளிரவில் கைது - 30 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மார்ச்.3-
பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நேற்று முன்தினம் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பிரதமரின் தமிழக வருகைக்கு எதிர்ப்பு எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இதில் நாகர்கோவில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் டதி பள்ளி சந்திப்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது அங்கிருந்த மரத்தில் மாநகர காங்கிரஸ் தலைவரும், மாநகராட்சி காங்கிரஸ் கவுன்சிலருமான நவீன்குமார் தலைமையில் காங்கிரசார் பிரதர் மோடியை அவமதிக்கும் வகையில் அவரது திருவுருவ பொம்மையை கட்டி தொங்கவிட்டனர்.

இந்த தகவல் அறிந்ததும் கோட்டார் போலீசார் சென்று உருவ பொம்மை அப்புறப்படுத்தினர். இந்த தகவல் அறிந்ததும் பாரதிய ஜனதா கட்சியினர் அந்த பகுதியில் திரண்டு பிரதமரை அவமதிப்பு செய்தவர்களை கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் மாறியலில் ஈடுபட்டனர். அங்கு வந்த போலீசார் சாலை மறியல் ஈடுபட்ட பாஜ. வினரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் சம்பவத்துக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளவர்கள் என போலீசார் உறுதி அளித்ததின் பேரில் பா ஜ கட்சியினர் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பாரதிய ஜனதா கவுன்சிலர் ரமேஷ் கோட்டார் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதை தொடர்ந்து டிஎஸ்பி சிவசங்கரன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். இது தொடர்பாக மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் நவீன் குமார் உட்பட கண்டால் தெரியும் 30 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இவர்களில் நவீன் குமாரை சம்பவ தினம் நள்ளிரவு போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் உள்ள தலைவர்கள் சிலைகளுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.



மதுரையில் விமான நிலையத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா, தொடர்ந்து திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் தரிசனம் பின்னர் மதுரை மண்டேலா நகர் சுற்றுசாலை பகுதியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் பிரம்மாண்ட பொதுக் கூட்டம் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசியதை தொடர்ந்து விமான நிலையம் சென்று அங்கு இருந்து டில்லி கிளம்பிய பிரதமர் மோடியை அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் டாக்டர் மணிகண்டன் விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்தார்.

# குளச்சல் அருகே வேலை பிடிக்காததால் வாலிபர் தற்கொலை

குளச்சல், மார்ச். 3 -
குளச்சல் அருகே உள்ள பாலப்பள்ளம் பகுதியை சேர்ந்தவர் குமாரதாஸ். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். மூத்த மகன் அஜித் குமார் (31 ) ஊரில் நில அளவையராக ஒப்பந்த முறையில் வேலை பார்த்து வருகிறார். இளைய மகன் அனில் குமார் (29 ). இன்னும் திருமணம் ஆகவில்லை. சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தார். வேலை பிடிக்காமல் ஊருக்கு திரும்பி வந்தவர் அண்ணனுடன் நில அளவு வேலைக்கு சென்று வந்தார்.

இதற்கிடையே கடந்த மாதம் 23ஆம் தேதி அனில் குமார் அண்ணனுடன் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தார். இதனை தந்தை குமாரதாஸ் கண்டித்ததாக கூறப்படுகிறது. இரவு அனில்குமார் சாப்பிடாமல் தன் அறை கதவை பூட்டிவிட்டு உள்ளே இருந்துள்ளார். தாயார் கதவை வெகு நேரம் தட்டியும் கதவு திறக்கவில்லை.

ஜன்னல் வழியாக பார்த்தபோது அனில் குமார் மின்விசிறியில் சேலையில் தூக்கு போட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டார். உடனே கதவை உடைத்து மீட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர். அங்கு அனுமதிக்கப்பட்டு கடந்த ஒரு வாரமாக சிகிச்சை பெற்று வந்த அனில்குமார் சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து குளச்சல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு அரசு பொது தேர்வினை முன்னிட்டு, மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட ஒக்கூர் வெள்ளையஞ் செட்டியார் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் அதிகாரிகளுக்கு விருதுநகர் மாவட்ட கலெக்டர் உத்தரவு



விருதுநகர், மார்ச்.03-
விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நல உதவித்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.


மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இம்மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், பல்வேறு விபத்துகளில் பெற்றோரை இழந்த 5 மாணவ/மாணவிகளுக்கு தலா ரூ.75 ஆயிரம் மதிப்பிலான காப்பீட்டுப் பத்திரங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆனந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிர்தௌஸ் பாத்திமா, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பனமரத்துப்பட்டி ஒன்றியம், நெய்க்காரப்பட்டி ஊராட்சி சமத்துவபுரம் பகுதியில் பகுதி நேர நியாயவிலை கடையை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சேலம் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் பாரப்பட்டி க.சுரேஷ்குமார், பனமரத்துப்பட்டி ஒன்றிய செயலாளர் உமாசங்கர், கூட்டுறவு சார்பதிவாளர் சுமதி, மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாகர்கோவில், மார்ச்.3–
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் வைத்து மாவட்ட ஆட்சியர் அழகுமீனா தலைமையில், நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித் தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 451 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய் குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருமதி. மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# அய்யாவைகுண்டர் அவதார தினவிழா: திருவனந்தபுரம் சிங்காரதோப்பு பதியிலிருந்து பல்லக்கு பவனி!



நாகர்கோவில், மார்ச். 3-

அய்யா வைகுண்டர் விடுதலையாகி சாமிதோப்பு சென்றதை நினைவுகூறும் விதமாக திருவனந்தபுரத்திலிருந்து சாமிதோப்பிற்கு வாகன பவனியாக திருஏடு எடுத்துசென்றனர்

திருவிதாங்கூர் மன்னர் ஆட்சி காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு விதிக்கப்பட்ட முலைவரி, மீசை வரி உட்பட பல்வேறு வரிகளுக்கு எதிராக போராடியதற்காக அய்யாவைகுண்டரை திருவிதாங்கூர் மன்னரான சுவாதித்திருநாள் மார்த்தாண்ட வர்மா 1838 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் சிறையிலடைக்க உத்தரவிட்டார் தொடர்ந்து குதிரையின் கால்களில் பூட்டப்பட்டபடி சாலையில் இழுத்துச்செல்லப்பட்டு அய்யா வைகுண்டர்திருவனந்தபுரம் சிறையிலடைக்கபட்டார் பின்னர் 110நாட்களுக்கு பிறகு 1839ஆம் ஆண்டு விடுதலையான அய்யவைகுண்டர் சிங்காரதோப்பு பகுதியிலிருந்து சாமிதோப்பிற்கு திரும்பினார்.

இதை நினைவுகூறும் விதமாகவும் அய்யாவைகுண்டர் அவதார தினவிழா நாளை மறுநாள் நடைபெறவுள்ளதையொட்டியும் திருவனந்தபுரம் சிங்கார தோப்பு பதியிலிருந்து அய்யாவழிபக்தர்கள் அலங்கரிக்கபட்ட பல்லக்கு வாகனத்தில் திருஏடு எடுத்தவாறு வாகனபவனியாக சாமிதோப்பிற்கு புறப்பட்டனர் திருவனந்தபுரம் முதல் சாமிதோப்புவரை நடைபெற்ற பவனியில் வழியெங்கிலும் திருஏட்டிற்கு அய்யாவழி பக்தர்கள் சிறப்பான வரவேற்பளித்தனர்.திருவனந்தபுரம்சிங்காரத் தோப்பில் இருந்து சாமிதோப்பு நோக்கி புறப்பட்ட ஊர்வலத்திற்கு முருகேசன் தலைமை தாங்கி தாங்கினார். அன்புவனம் நிர்வாகி பேராசிரியர் ஆர் தர்ம ரஜினி சீடர் விஜயராகவன் ஆகியோர் திருஏட்டினை எடுத்துக் கொடுத்து ஊர்வலத்தை தொடங்கி வைத்தனர் ஊர்வலத்தில் ஹரி கிருஷ்ணன் ,தர்மமணி ,பரமேஸ்வரன் நாடார் ,வினோத் ஆதி உட்பட பலர் கலந்து கொண்டு அய்யாவின் ஆகம நூலான அகிலத்திரட்டு அம்மானையை ஊர்வலமாக எடுத்துக் கொண்டு சுவாமி தோப்பு சென்றனர்.அய்யாவழி சமயத்தலைவர் பால பிரஜாபதி அடிகளார் ஊர்வலத்தை வரவேற்றார்.

# காணிமடம் யோகி ராம்சுரத்குமார் மந்த்ராலய நிறுவனர் நாமரிஷி தபஸ்வீ பொன்காமராஜ் சுவாமிகளுக்கு தமிழகத்தின் முதல் மண்டல மகாந்த் தமிழ்நாடு பட்டம்



கன்னியாகுமரி, மார்ச். 3-

காணிமடம் யோகி ராம்சுரத்குமார் மந்த்ராலய நிறுவனர் நாமரிஷி தபஸ்வீ பொன்காமராஜ் சுவாமிகளுக்கு தமிழகத்தின் முதல் மண்டல மகாந்த் தமிழ்நாடு பட்டத்தை உத்திரபிரதேச மஹா மண்டலேஷ்வர் டாக்டர் பிரபாகரனந்தா சரஸ்வதி மகாராஜ் சுவாமிகள் வழங்கினார்.

உத்திரபிரதேசம் மாநிலம் வாரணாசியில்(காசி) செயல்பட்டு வரும் ஸ்ரீ பஞ்சதாசனம் ஆவாஹன் அகதா சார்பில் நீண்ட காலமாக இறைபணியில் திறம்பட செயலாற்றி வரும் இறைபணியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மடாதிபதி பட்டங்களை வழங்கி வருகிறது.

அந்த வகையில் குமரி மாவட்டம் அஞ்சுகிராமத்தை அடுத்த காணி மடத்தில் கடந்த 38 வருடங்களுக்கு மேலாக இறைப்பணி செய்து வரும் காணிமடம் யோகி ராம்சுரத்குமார் மந்திராலய நிறுவனர் நாமரிஷி தபஸ்வீ பொன் காமராஜ் சுவாமிகள் நெல்லை, மதுரை, கோவை, சென்னை உள்ளிட்ட வெளி மாவட்டங்கள், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்கள், சிங்கப்பூர் மலேசியா, லண்டன் உள்ளிட்ட வெளிநாடுகளில் ஆற்றி வரும் இறைபணியையும், சேவைகளையும் அறிந்து கொண்டு அவரை தேர்வு செய்தனர்.

பின்னர் அவர்கள் காணிமடம் வந்து யோகி ராம்சுரத்குமார் மந்திராலய நிறுவனர் நாமரிஷி தபஸ்வீ பொன் காமராஜ் சுவாமிகளை நேரில் சந்தித்தனர். தொடர்ந்து இருதினங்கள் பல்வேறு பூஜைகள், அபிஷேகம் செய்தும், அவருக்கு பல்வேறு ஆகமங்களை உபதேசித்தும், தீட்சை வழங்கியும் தமிழகத்தின் முதல் மண்டல மகாந்த் தமிழ்நாடு (பீடாதிபதி) எனும் பட்டத்தை உத்திரபிரதேசம் மாநில மஹா மண்டலேஷ்வர் டாக்டர் பிரபாகரனந்தா சரஸ்வதி மகாராஜ் சுவாமிகள், குமரி மாவட்டம் வெள்ளிமலை சைதன்யா ஆனந்த்த சுவாமிஜீ மகராஜ் முன்னிலையில் வழங்கினார்.

# மாற்றுக் கட்சியில் இருந்து விலகிய 300க்கும் மேற்பட்டவர்கள் த.வெ.கட்சியில் இணைந்தனர்



வேப்பனப்பள்ளி மார்ச். 3-

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடைப்பெற்றது.

சூளகிரி தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.சிவராஜ் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்ற இந்த செயல்வீரர்கள் கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ், மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல், கழகப் பிரமுகர் எஸ்.ஆர்.சம்பங்கி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு தேர்தல் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்ட மன்றத் தொகுதிகளிலும் த.வெ.க கட்சி வலுவான நிறையில் உள்ளது. இதனை பயன்படுத்தி வாக்காளர்களை வாக்களிக்க ஊக்கு விக்க வேண்டும், குறிப்பாக மத்திய மாநில அரசு த.வெ.க கட்சியை நசுக்குகின்ற பணியில் ஈடுப்பட்டுள்ளது. இதனை முறியடித்து வருகின்ற தேர்தலில் மத்திய மாநில அரசுகளுக்கு பாடம் புகட்டப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் இன்னும் 50 நாட்களுக்கு அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

மேலும் மத்திய, மாநில அரசுகளின் செயல்பாட்டுகள் குறித்து கிராமங்கள் தோறும் தின்னை பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க கட்சியின் வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.மேலும் இந்தக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு கட்சியிலிருந்து விலகிய 200-க்கு மேற்பட்டவர்கள், மற்றும் புதிய வாக்காளர்களான நூற்றுக்கும் மேற்பட்டோர் கழகப் பிரமுகர் எஸ்.ஆர்.சம்பங்கி, மற்றும் மாவட்டச் செயலாளர்கள் முன்னிலையில் த.வெ.க கட்சியில் இணைந்தனர். புதிதாக கட்சியில் இணைந்த அனைவருக்கும் மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ்குமார் கட்சி சால்வை அணிவித்து வரவேற்றார்.

இந்தக்கூட்டத்தில் தவெக கட்சியை சேர்ந்த நிர்வாகிகளான பசவராஜ், திம்ராஜ், பிரசாந்த், பார்த்தசாரதி, சீனிவாசன், சபரி, பிரதீப், நாகராஜ், சந்தோஷ், சீனி, ரஞ்சித், சுதாகர், முனிராஜ், இளங்கோ, துரை, சந்தோஷ் வீரபத்ரன், லிங்கா, மணி, சதீஷ் பாபு, வெங்கடேஷ், உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகளும், மகளிர் அணி நிர்வாகிகளும், சார்பு அணியை சார்ந்த அனைத்து நிர்வாகிகளும், பிஎல்ஏ2, வாக்குச்சாவடி முகவர்களும், கலந்து கொண்டனர்.




# கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் இருந்து தவறி விழுந்த கபடி வீரர் உயிரிழப்பு 5 மணி நேர தேடுதலுக்கு பின் உடல் மீட்பு

நாகர்கோவில், மார்ச்.3-

குளச்சல் அருகே உள்ள அம்மாண்டிவிளை பகுதியை சேர்ந்தவர் ரத்தினசாமி மகன் அஜின் (29). கபடி வீரர். இவர் சென்னையில் உள்ள தனது நம்பரை பார்ப்பதற்காக நேற்று முன்தினம் மாலை கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் சென்னைக்கு புறப்பட்டார். இவருடன் வேறு சில நண்பர்களும் உடன் சென்றனர். இவர்கள் முன்பதிவு இல்லாத பெட்டியில் பயணித்தனர்.

ரயில் சென்ற போது திடீரென வாசலில் நின்று கொண்டு இருந்த அஜின் தவறி கீழே விழுந்தார். ரயில் வேகமாக சென்று கொண்டிருந்ததால் உடன் இருந்தவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இதற்கு இடையே ரயில் திருநெல்வேலி சென்றதும் அங்குள்ள போலீசாட்டம் கூறினார்கள். வள்ளியூர் கடந்து வரும்போது விழுந்தார் என்பதால் நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலைய போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இரவு 7 மணிக்கு தகவல் வந்ததும் நாகர்கோவில் போலீசார் வள்ளியூர் முதல் நாங்குநேரி சுற்றுவட்ட தண்டவாளத்தில் தேடினர்.

இதேபோல திருநெல்வேலி ரயில்வே போலீசார் நாங்குநேரியில் இருந்து வள்ளியூர் நோக்கி தேடிவந்தனர். இதற்கிடையில் வள்ளியூர் அடுத்த தளபதி சமுத்திரம் என்ற இடத்தில் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு அஜின் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இரவு 7 மணி தொடங்கி நள்ளிரவு 12 மணி வரை தேடிய பின் அஜின் உடலை போலீசார் கண்டுபிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்னைநகரில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் விஜய் வசந்த் எம்.பி. அடிக்கல் நாட்டினார்



நாகர்கோவில், மார்ச்.3-

இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம். பள்ளம் துறை ஊராட்சி, அன்னை நகரில் பாரளுமன்ற உறுப்பினர் தொகுதி (2025 - -2026) மேம்பாடு நிதியிலிருந்து ரூ. 25 லட்சம் செலவில் உள் விளையாட்டு மைதானம் கட்டுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணியின் அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. அன்னைநகர் பங்கு பணியாளர் ரெமண்ட் அர்ச்சிப்பில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் வட்டார தலைவர் அசோக்ராஜ், மாவட்ட துணைத் தலைவர் மணக்குடி லாரன்ஸ், நாகர்கோவில் மாநகர பொதுச்செயலாளர் கலையரசு, அன்னை நகர் ஊர் தலைவர் கென்னடி, அன்னை நகர் முன்னாள் ஊர் தலைவர் ஆன்சல், அன்னை நகர் காங்கிரஸ் தலைவர் லூயிஸ், பள்ளம் பஞ்சாயத்து கமிட்டி காங்கிரஸ் தலைவர் கெவின், புத்தளம் பேரூராட்சி தலைவர் ரங்கன், தர்மபுரம் பஞ்சாயத்து பொருளாளர் ரவிசந்திரன், காங்கிரஸ் நிர்வாகிகள் செல்வி, சார்லஸ் செல்லையா, ஒப்பந்தக்காரர் முருகன் உட்பட ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஈரான் உச்ச தலைவர் இமாம் அலி காமேனி படுகொலையை கண்டித்து தமுமுக கிழக்கு மாவட்டம் சார்பில் ஆர்ப்பாட்டம்



ராமநாதபுரம், மார்ச். 3-

ஈரானுக்கு எதிராக பயங்கரவாத அமெரிக்கா தாக்குதலை கண்டித்தும் ஈரானின் உச்ச தலைவர் இமாம் அலி கமேனி படுகொலையை கண்டித்து தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பாக மாநிலம் தழுவிய அமைதி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன் ஒரு பகுதியாக தொண்டி பேரூர் பி.வி.பட்டிணத்தில் ராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் தமுமுக சார்பாக தமுமுக மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜிஃப்ரி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைப்பு சொந்தங்கள் மற்றும் தமுமுக மமக தொண்டி பேரூர், பி.வி.பட்டிணம் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தமுமுக மமக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெரும் திரளான சமூக சொந்தங்கள் கலந்து கொண்டனர். நிகழ்வை பி.வி.பட்டிணம் கிளை தலைவர் சலீம், தமுமுக செயலாளர் ரியாஸ், உள்ளிட்ட நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில் தொண்டி கிழக்கு பகுதி தமுமுக செயலாளர் இபுராமுஷா, தொண்டி பேரூர் மமக துணை செயலாளர் ரிஸ்வான், தொண்டி இளைஞர் அணி செயலாளர் யாசிர், நம்புதாளை தமுமுக செயலாளர் ஜாசிர், மற்றும் பி.வி.பட்டிணம் ஜமாத்தார்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், கள்ளந்திரி ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பாக சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.**

# அலி காமேனி வீரமரணம் ஜவாஹிருல்லா கண்டன அறிக்கை



**சென்னை, மார்ச் 3–**


**மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம் எச் ஜவாஹிருல்லா எம்எல்ஏ அறிக்கையில் கூறியிருப்பதாவது; ஈரான் இஸ்லாமிய குடியரசின் உயரிய தலைவர் அலி காமேனி உயிரிழந்த செய்தி மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து மேற்கொண்டதாக கூறப்படும் வான் வழி பயங்கரவாத தாக்குதல், ஒரு சுயாட்சி நாட்டின் இறையாண்மையை வெளிப்படையாக மீறும் செயல் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதி இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை, சர்வதேச சட்டங்களையும் ஐ.நா. சாசனத்தின் அடிப்படை கோட்பாடுகளையும் மீறும் ஆபத்தான முன்மாதிரியாகும். ஒரு நாட்டின் அரசியல் மற்றும் மதத் தலைமை அமைப்பை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் தாக்குதல், பிராந்திய அமைதியை சீர்குலைக்கும் செயல் மட்டுமல்ல; அது உலக அமைதிக்கும் பெரும் அச்சுறுத்தலாகும். இத்தகைய ஒருதலைப்பட்சமான பயங்கரவாத நடவடிக்கைகள் மத்திய கிழக்கு பிராந்தியத்தை மேலும் தீவிர மோதல்களுக்குள் தள்ளக்கூடியவை. பல தசாப்தங்களாக பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முயற்சிக்கப்பட்ட விவகாரங்கள், இராணுவ தாக்குதலால் ஒருபோதும் தீர்க்கப்படமாட்டாது. போர் என்பது தீர்வாகாது; அது மனித உயிரிழப்புகளையும் அழிவையும் மட்டுமே அதிகரிக்கும். எனவே,அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உடனடியாக அனைத்து தாக்குதல் நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். சர்வதேச சமூகம் அவசரமாக தலையிட்டு, மோதலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரச்சினைகள் அனைத்தும் தூதரக வழி மற்றும் அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை அவசரக் கூட்டம் கூட்டி, பிராந்திய அமைதியை உறுதி செய்ய வேண்டும். ஒரு சுயாட்சி நாட்டின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலை கடுமையாகக் கண்டிக்கிறோம். உலக நாடுகள் அனைத்தும் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு, போர் அல்ல, அமைதியே மனிதகுலத்தின் பாதை என்பதை மீண்டும் உறுதி செய்ய வேண்டுகிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.**

# தருமபுரி நகர திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டி அன்னதானம் வழங்கி கொண்டாடினார்கள்



**தருமபுரி, மார்ச். 03–**

**தருமபுரி நகர திமுக சார்பில் முதலமைச்சர் ஸ்டாலினின் 73 – வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நகர செயலாளர் நாட்டான் மாது தலைமையில் நான்கு ரோட்டில் பட்டாசு வெடித்தும், கேக் வெட்டி கொண்டாடினார்கள். இதைத் தொடர்ந்து தருமபுரி நகர பேருந்து நிலையத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் நகரத் துணைச் செயலாளர் வ. முல்லவேந்தன், தலைமை கழக பேச்சாளர் டி. ஏ. ரவி, மாவட்ட சிறுபான்மை அமைப்பாளர் ரஹீம், வெல்டிங் ராஜா, சம்மந்தம்,சுருளிராஜன், காசிநாதன்,கனகராஜ், பெருமாள் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.**



**கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள பர்கூர் வடக்கு ஒன்றிய குருவிநாயனபள்ளி கிராமத்தில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 73 ஆவது பிறந்தநாள் ஒட்டி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோவிந்தராஜ் தளபதி தலைமையில் பட்டாசு வெடித்தும் சுமார் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு இனிப்புகள் மற்றும் பெண்களுக்கு புடவை வழங்கினார்.இதில் சிறப்பு அழைப்பாளராக பர்கூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் முன்னாள் தலைவர் வெங்கடேசன், வார்டு உறுப்பினர் பாலாஜி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அப்துல் காதர், எல்லப்பன், மணி, பெருமாள், சின்னசாமி, திருப்பதி, ராஜேந்திரன், அன்வர், மாணிக்கம், சின்னத்தம்பி, சின்னப்பையன், முருகன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் என சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு முதலமைச்சர் பிறந்த நாளை வெகு சிறப்பாக கொண்டாடினார்.**

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.